
அருள்மிகு விநாயகர் போற்றி



தமிழ்நாடு அரசு வெளியீடு

Rs: 1-00
(ரூபாய் ஒன்று மட்டும்)

உ

ஈச்சனாரி விநாயகர் துணை

பிள்ளையார் பிள்ளையார்
ஈச்சனாரி பிள்ளையார்
ஆற்றங்கரைஓரத்தில்
அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஆறுமுக வேலனின்
அண்ணனான பிள்ளையார்
நேருந்துன்பம் யாவையுமே
தீர்த்துவைக்கும் பிள்ளையார்
மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் காட்டும் பிள்ளையார்
தாசநாதர்கள் தலையால்
வணங்கித் தழைந்திடவும்
ஈசனார்க்கெல்லாம் இனியனாம்
எம் ஈச்சனாரி விநாயகனே.

நன்றி

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"
எனும் முழக்கத்தை உருவாக்கி
தமிழறிந்த பெருமக்கள் எல்லாம்
தாம் வணங்கும் தெய்வத்தைத்
தமிழால் வழிபட வேண்டும்
எனும் கருத்தை வலியுறுத்தி
அறநிலையத் துறையின் சார்பில்
போற்றிப் பாடல்களை
வெளியிடும் வாய்ப்பளித்த
பவள விழா நாயகர்
தமிழக முதல்வர் கலைஞர்
அவர்கட்கு நன்றி.

இந்து சமய அறநிலையத்துறை

❖❖❖❖❖

தமிழில் போற்றிப் பாடல்கள்

௵௵௵௵௵

மேம்பாட்டுக் குழு

1. தி. முத்துக்கண்ணப்பர், சென்னை.
2. முனைவர் சுப. அண்ணாமலை, மதுரை.
3. முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை.
4. பா. நமசிவாயம், திருப்பத்தூர்
5. முனைவர் அ. அறிவொளி, திருச்சி.
6. முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை.
7. முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை.
8. புலவர் கோ. சாரங்கபாணி, புதுவை.
9. முனைவர் த. அமிர்தலிங்கம், சென்னை.
10. வேங்கடவரதன், சென்னை.
11. சு. இளங்கோவன், காஞ்சிபுரம்.

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தமிழில் போற்றிப் பாடல்கள்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு சமுதாயத்தின் ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்கள் உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயற்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும் நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகன், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக்கவிதை எழுதிவிடக்கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருமுருகாற்றுப்படை போன்ற மூல நூல் வரிகள் ஒரே சீராக, இரு சீராக, முச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக்கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் தான் இந்த வரிகள் அரங்கேற்றப்பட்டன. இது இரண்டாவது கட்டம். அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து, திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின் உருவாக்கப்பட்ட போற்றிப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஆதீனகர்த்தர்களுக்கு

அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும் எங்கள் துறையின் சார்பில் இதைச் செயல்படுத்துவதிலும் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி வரிகளும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

ஆணையர் மெய்கண்டதேவன் தலைமையில் அலுவலர்குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட திரு.பி.கே. துரைசாமி தாமே முன் வந்துள்ளார்.

இவ்வகையில் துறைச் செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள் உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

"என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யு மாறே"

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்

24-4-98.

❖❖❖❖❖

அணிந்துரை

திருமிகு த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
தலைமைச் செயலகம், சென்னை 600 009.

தமிழில் இறைவனைப் போற்றுவதே இறைவனுக்குப் பெருமகிழ்வான ஒன்று என்பதைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்,

"அருச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார்"

எனப் பாடியிருக்கக் காண்கின்றோம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம்தாம் சென்று வழிபட்ட திருத்தலங்களில், தமிழிலேயே தத்தம் பாடல்களைப் பாடி இறைவர்-இறைவியரைப் போற்றினரே அன்றிப்பிறமொழியில் பாடல்களைப் பாடி அருச்சனை செய்து இறைவரை வழிபட்டதாக வரலாறு ஒன்றும் இல்லை.

தமிழமுதினைப் பருகிப் பெருமகிழ்வு காண்பதற்கே இறைவரும், இறைவியரும் இப்பூவுலகில் மானிடத்தோற்றத்தில் மகிழ்வோடு வந்து தோன்றி வாழ்ந்ததாகப் பைந்தமிழ் இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன.

"தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும், தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதுவும், தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்
இக்
கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்"

என்று குமரகுருபரர் பாடியிருப்பது கொண்டு பைந்தமிழ்மேல் இறைவர்-இறைவியருக்குள்ள பற்றினை நாம் நன்கு உணரலாம்.

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றலும் நம்தெய்வத் தமிழ்மொழிக்கே உண்டு என்பதையும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில்,

"தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத்
திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச்
சொற்களோ சாற்றீர்"

என்று பாடியிருப்பது கொண்டு தெளியலாம்.

இத்தகைய அருந்தமிழ் மொழியில் ஒவ்வொரு நாளும் திருக்கோயில்கள்தோறும் இறைவர்-இறைவியரைப் போற்றுதல் செய்யின் நம் தமிழ் மக்களின் நாடும், வீடும் ஒருங்கு பல்லாயிரம் கோடி பல்வளமும் நலமும் பெற்றுச் சிறக்கும் என்பது திண்ணம்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும் நனிசிறந்தோங்கும் வகையில் நற்றமிழ் போற்றி நூல்களை, ஞாலம் போற்றும் ஞானத்தமிழ் மொழியில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியிடுவது நம் தமிழ்த் திருநாட்டின் வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க மாட்சிமிக்க சாதனையாகும்.

என் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்து அகம் மகிழ்கின்றேன்.

த.இரா. சீனிவாசன்
30-4-98.

❖❖❖❖❖

முன்னுரை

திருமிகு.ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 600 034.

அன்னைத் தமிழில் அருந்தமிழ் போற்றி நூல்கள் அறநிலையத்துறை அச்சிட்டு வெளியிடும் இந்நாள் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க ஒரு வெற்றித் திருநாள் ஆகும்.

பன்னெடுங்காலமாக நம் தமிழக மக்கள் ஏங்கிய ஏக்கம் தீரத் திருக்கோயில்களில் இன்று பெருந்தமிழ் பேரொளிப்போற்றி ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றது.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும், தமிழோடு இசைப் பாடல் மறவாத நாவுக்கரசுப் பெருமானும் உளம் மகிழும் திருநாள் இந்நாள். எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு ஞானத் தமிழ் பாடிப் போற்றிய ஆழ்வார் பெருமக்கள் மனம் பூரிக்கும் நன்னாள் இப் பொன்னாள்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில், நம் தமிழ் மக்கள் நமக்குரிய தமிழ்மொழியில் நமக்குரிய இறைவர் இறைவியரை வழிபட்டுப் போற்றுவது இயற்கை நெறிக்கு இயைந்த ஒன்றாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து நம் தமிழ் அறிஞர் பெருமக்கள் தெய்வத் திருமுறைகளிலிருந்தும், திவ்வியப் பிரபந்தங்களிலிருந்தும், ஒலிப்பிற்கு இனிய, எளிய போற்றிகளைத் தொகுத்துத் திரட்டி, அவற்றை நூலாக வழங்கியுள்ளார்கள்.

"கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்"

என்ற உமாபதிசிவம் அவர்களின் அருள் வாக்கிற்கு இணங்கவும்,

"செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி"

என்ற வேதாந்ததேசிகர் தம் மெய்ம்மொழிக்கு இணங்கவும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த அருந்தமிழில் அமைந்துள்ள இப்போற்றி

நூல்களைப் போற்றித் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது திண்ணம்.

தமிழின் இனிமையிலே இறைவன் உறைகின்றான். தமிழிசைப் பாடல்களிலே இறைவனும் இறைவியும் மகிழ்கின்றார்கள்; தமிழில் போற்றி செய்யும் தமிழ்ப் பெருமக்களுக்கே எல்லா நலன்களும், வளங்களும் நிறைக்கின்றார்கள்; தமிழ்ப் பெருமக்கள் எல்லாரும் இசைவிருப்பர் ஆகிய இறைவர்-இறைவியரை இன்தமிழால் போற்றிப் பரவி வாழ்வில் வளங்களும், நலன்களும் சேர்ந்து, வாழ்வாங்கு வாழ அன்புடன் வேண்டுகின்றேன்.

அறநிலையத்துறையின் இவ்வரும்பணிக்கு ஊக்கமுடன் ஆக்கம் சேர்த்த சான்றோர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பாரில் அரியாசனம் உனக்கே ஆனால்
சரியாரும் உண்டோ தமிழே!"
"இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

ச. மெய்கண்டதேவன்.

❖❖❖❖❖

தமிழ் அருச்சனை – அருள் வேண்டுதல்
(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இந்நன்னாளில்.................................... அவர்களுக்கும்,
அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்
சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,
பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்
பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள்
பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல
வாழ்வெய்தவும்

உமது திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

❖❖❖❖❖

அருள்மிகு விநாயகர் போற்றி

அருள்மிகு விநாயகர் 8 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
3. ஓம் ஆனை முகத்தனே போற்றி
4. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
5. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
6. ஓம் கற்பக விநாயகா போற்றி
7. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
8. ஓம் வைத்த மாநிதியே போற்றி

❖❖❖❖❖

அருள்மிகு விநாயகர் 16 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் ஆதார கணபதி போற்றி
3. ஓம் ஆரண முதலே போற்றி
4. ஓம் ஆனை முகத்தனே போற்றி
5. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
6. ஓம் உண்மையுள் உள்ளொளியே போற்றி
7. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
8. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
9. ஓம் கற்பக விநாயகா போற்றி
10. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி
11. ஓம் சித்தி விநாயகா போற்றி
12. ஓம் தத்துவ முதலே போற்றி
13. ஓம் பரம தயாளா போற்றி
14. ஓம் முக்கட் கரும்பே போற்றி
15. ஓம் வெற்றித் திருவே போற்றி
16. ஓம் வைத்த மாநிதியே போற்றி

❖ ❖ ❖ ❖ ❖

அருள்மிகு விநாயகர் 108 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி
5. ஓம் அறக் கருணையாய் போற்றி
6. ஓம் அறிவானந்த உருவே போற்றி
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
8. ஓம் ஆதார கணபதி போற்றி
9. ஓம் ஆரண முதலே போற்றி
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி
11. ஓம் இடர்தன்னக் களைவாய் போற்றி
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி
16. ஓம் ஈசனார் மகனே போற்றி
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி
19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி
20. ஓம் உய்வருள் பெருமாள் போற்றி
21. ஓம் உலகெலாம் ஆனாய் போற்றி
22. ஓம் உலவாத இன்பமே போற்றி
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி
26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி

27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி
28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி
29. ஓம் எழில்வளர் சோதி போற்றி
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
35. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
36. ஓம் கங்கை வேணியா போற்றி
37. ஓம் கணநாத கற்பகா போற்றி
38. ஓம் கணபதிக் களிறே போற்றி
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி
42. ஓம் கற்பக விநாயகா போற்றி
43. ஓம் காங்கேயன் தமையா போற்றி
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி
49. ஓம் கைப்போதகமே போற்றி
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
52. ஓம் சந்திர சேகரா போற்றி

53. ஓம் சித்தத் தேனே போற்றி
54. ஓம் சித்தி விநாயகா போற்றி
55. ஓம் சித்தி புத்தி மணாளா போற்றி
56. ஓம் சிவ கணபதியே போற்றி
57. ஓம் சீர்பெற அருள்வோய் போற்றி
58. ஓம் செல்வக் கணேசா போற்றி
59. ஓம் செல்வமருள்வோய் போற்றி
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி
61. ஓம் சேமம் தருவோய் போற்றி
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி
63. ஓம் தத்துவ முதலே போற்றி
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி
65. ஓம் தந்தி முகனே போற்றி
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி
68. ஓம் தற்பர விநாயகா போற்றி
69. ஓம் தாரக மறையே போற்றி
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி
73.. ஓம் நந்திமகனே போற்றி
74. ஓம் நாத முடிவே போற்றி
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி
76. ஓம் நான்ற வாயினை போற்றி
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி
78. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி
80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி

83. ஓம் பரம தயாளா போற்றி
84. ஓம் பரிதிபோல் மதிதருவாய் போற்றி
85. ஓம் பாதிமதி சூடி போற்றி
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி
87. ஓம் பிரணவக் களிறே போற்றி
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி
89. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி
91. ஓம் பையரவசைத்தாய் போற்றி
92. ஓம் போக நாயகா போற்றி
93. ஓம் போத வடிவே போற்றி
94. ஓம் மணிநீல கண்டா போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாசிலா மணியே போற்றி
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி
98. ஓம் முடியா முதலே போற்றி
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி
102. ஓம் யாவு மானாய் போற்றி
103. ஓம் யோகியர் தலைவா போற்றி
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி
107. ஓம் வெற்றித் திருவே போற்றி
108. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி.

❖❖❖❖❖

பாடல் : விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு விநாயகப் பெருமான் அருள்
முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக,
உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக,
மங்களம் உண்டாகுக.

❖❖❖❖❖

தமிழ்நாடு அரசு வெளியீடு

திருக்கோவில்களின் பயன்பாட்டுக்கு

மட்டும்

இலவச வெளியீடு


அன்பளிப்பு

ஏஆர்சி சரக்குப் போக்குவரத்து

(ARC Parcel Service)


கிருட்டிணசாமி மாளிகை **(Towers)**

கோவை - 641 012.



அருள்மிகு விநாயகர் திருக்கோயில், பொள்ளாச்சி நெடுஞ்சாலை,
ஈச்சனாரி, கோயமுத்தூர் - 641 021.

அருள்மிகு முருகவேள் - போற்றி




அருள்மிகு
சுப்ரமணியசுவாமி
- திருப்பரங்குன்றம்



அருள்மிகு
பாலசுப்ரமணியசுவாமி
- திருச்செந்தூர்



அருள்மிகு
பழநி ஆண்டவர்
- பழநி



அருள்மிகு
சுவாமிநாதசுவாமி
- சுவாமிமலை



அருள்மிகு
சுப்ரமணியசுவாமி
- திருத்தணி



அருள்மிகு
சோலைமலை முருகன்
- பழமுதிர்ச்சோலை

நன்றி



"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"
எனும் முழக்கத்தை உருவாக்கி

தமிழறிந்த பெருமக்கள் எல்லாம்
தாம் வணங்கும் தெய்வத்தைத்

தமிழால் வழிபட வேண்டும்
எனும் கருத்தை வலியுறுத்தி

அறநிலையத் துறையின் சார்பில்
போற்றிப் பாடல்களை

வெளியிடும் வாய்ப்பளித்த
பவள விழா நாயகர்

தமிழக முதல்வர் கலைஞர்
அவர்கட்கு நன்றி!

- இந்து சமய அறநிலையத் துறை

Rs: 1-00
(ரூபாய் ஒன்று மட்டும்.

தமிழில் போற்றிப் பாடல்கள்

- மேம்பாட்டுக் குழு

1. தி. முத்துக்கண்ணப்பர், சென்னை.
2. முனைவர் சுப. அண்ணாமலை, மதுரை.
3. முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை.
4. பா. நமசிவாயம், திருப்பத்தூர்.
5. முனைவர் அ. அறிவொளி, திருச்சி.
6. முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை.
7. முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை.
8. புலவர் கோ. சாரங்கபாணி, புதுவை.
9. தா. அமிர்தலிங்கம், சென்னை.
10. வேங்கடவரதன், சென்னை.
11. சு. இளங்கோவன், காஞ்சிபுரம்.

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

5.5.1998
தி.பி. 2029 / சித்திரை 22.

தமிழில் போற்றிப் பாடல்கள்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு குமுகாயத்தின் (சமுதாயத்தின்) ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்களை உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயல்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும் நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகன், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக் கவிதை எழுதிவிடக்கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருமுருகாற்றுப்படை போன்ற மூல நூல் வரிகள் ஒரே சீராக, இரு சீராக, முச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக்கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில்தான் இந்த வரிகள் அரங்கேற்றப்பட்டன. இது இரண்டாவது கட்டம்.

அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து, திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின்

உருவாக்கப்பட்ட போற்றிப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஆதீன கர்த்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும் எங்கள் துறையின் சார்பில் இதைச் செயற்படுத்துவதிலும் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக்கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி வரிகளும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

ஆணையர் மெய்கண்டதேவன் தலைமையில் அலுவலர்குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட பலர் தாமே உதவ முன்வந்துள்ளனர்.

இவ்வகையில் துறைச் செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள், உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து உதவ முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

"என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யு மாறே"

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்,

மு. தமிழ்க்குடிமகன்

அணிந்துரை

த. இரா. சினிவாசன், இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
தலைமைச் செயலகம். சென்னை - 600 009.

தமிழில் இறைவனைப் போற்றுவதே இறைவனுக்குப் பெருமகிழ்வான ஒன்று என்பதைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்,

"அருச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்
தூ மறை பாடும் வாயார்"

எனப் பாடியிருக்கக் காண்கின்றோம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம்தாம் சென்று வழிபட்ட திருத்தலங்களில், தமிழிலேயே தத்தம் பாடல்களைப் பாடி இறைவர்-இறைவியரைப் போற்றினரே அன்றிப் பிறமொழியில் பாடல்களைப் பாடி அருச்சனை செய்து இறைவனை வழிபட்டதாக வரலாறு ஒன்றும் இல்லை.

தமிழமுதினைப் பருகிப் பெருமகிழ்வு காண்பதற்கே இறைவரும், இறைவியரும் இப்பூவுலகில் மானிடத்தோற்றத்தில் மகிழ்வோடு வந்து தோன்றி வாழ்ந்ததாகப் பைந்தமிழ் இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன.

"தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும், தனிமுதல் ஒரு நீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதுவும், தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில், இக்
கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்"

என்று குமரகுருபரர் பாடியிருப்பது கொண்டு பைந்தமிழ் மேல் இறைவர் -இறைவியருக்குள்ள பற்றினை நாம் நன்கு உணரலாம்.

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றலும் நம்தெய்வத் தமிழ்மொழிக்கே உண்டு என்பதையும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில்,

"தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்து முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத்
திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர்"

என்று பாடியிருப்பது கொண்டு தெளியலாம்.

இத்தகைய அருந்தமிழ் மொழியில் ஒவ்வொரு நாளும் திருக்கோயில்கள்தோறும் இறைவர்-இறைவியரைப் போற்றுதல் செய்யின் நம் தமிழ் மக்களின் நாடும், வீடும் ஒருங்கு பல்லாயிரம் கோடி பல்வளமும் நலமும் பெற்றுச் சிறக்கும் என்பது திண்ணம்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி வரும் எதிர்காலத்தின் சிறப்பும் நனிசிறந்தோங்கும் வகையில் நற்றமிழ் போற்றி நூல்களை ஞாலம் போற்றும் ஞாலத்தமிழ் மொழியில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியிடுவது நம் தமிழ்த் திருநாட்டின் வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களில், பொறிக்கத்தக்க மாட்சிமிக்க சாதனையாகும்.

என் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்து அகம் மகிழ்கிறேன்.

30.4.98 அன்புடன்,
சென்னை-9 இரா. சீனிவாசன்.

முன்னுரை

திருமிகு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

அன்னைத் தமிழில் அருந்தமிழ் போற்றி நூல்கள் அறநிலையத்துறை அச்சிட்டு வெளியிடும் இந்நாள் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க ஒரு வெற்றித் திருநாள் ஆகும்.

பன்னெடுங்காலமாக நம் தமிழக மக்கள் ஏங்கிய ஏக்கம் தீரத் திருக்கோயில்களில் இன்று பெருந்தமிழ்ப் பேரொளிப்போற்றி ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றது.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும், தமிழோடு இசைப் பாடல் மறவாத நாவுக்கரசுப் பெருமானும் உளம் மகிழும் திருநாள் இந்நாள். எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு ஞானத் தமிழ்பாடிப் போற்றிய ஆழ்வார் பெருமக்கள் மனம் பூரிக்கும் நன்னாள் இப்பொன்னாள்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில், நம் தமிழ் மக்கள் தமக்குரிய தமிழ்மொழியில் தமக்குரிய இறைவன் இறைவியரை வழிபட்டுப் போற்றுவது இயற்கை நெறிக்கு இயைந்த ஒன்றாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து நம் தமிழ் அறிஞர் பெருமக்கள் தெய்வத் திருமுறைகளிலிருந்தும், திவ்வியப் பிரபந்தங்களிலிருந்தும், பழந்தமிழ் நூல்களிலிருந்தும், பிள்ளைத் தமிழ் நூல்களிலிருந்தும், ஒலிப்பிற்கு இனிய, எளிய போற்றிகளைத் தொகுத்துத் திரட்டி, அவற்றை நூலாக வழங்கியுள்ளார்கள்.

"கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்"

என்ற உமாபதி சிவம் அவர்களின் அருள் வாக்கிற்கு இணங்கவும்,

"செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி"

என்ற வேதாந்த தேசிகர் தம் மெய்மொழிக்கு இணங்கவும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த அருந்தமிழில் அமைந்துள்ள இப்போற்றி நூல்களைப் போற்றித் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது திண்ணம்.

தமிழின் இனிமையிலே இறைவன் உறைகின்றான். தமிழிசைப் பாடல்களிலே இறைவரும், இறைவியும் மகிழ்கிறார்கள்; தமிழில் 'போற்றி' செய்யும் தமிழ்ப் பெருமக்களுக்கே எல்லா நலன்களும், வளங்களும் நிறைக்கின்றார்கள். தமிழ்ப் பெருமக்கள் எல்லோரும் இசைவிருப்பர் ஆகிய இறைவர் - இறைவியரை இன்தமிழால் போற்றிப் பாடி வாழ்வில் வளங்களும், நலன்களும் சேர்ந்து, வாழ்வாங்கு வாழ அன்புடன் வேண்டுகின்றேன்.

அறநிலையத்துறையின் இப்பெரும் பணிக்கு ஊக்கமுடன் ஆக்கம் சேர்த்த சான்றோர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பாரில் அரியாசனம் உனக்கே ஆனால்
சரியாரும் உண்டோ தமிழே!"
"இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

29.4.98

அன்புடன்,
ச. மெய்கண்டதேவன்

தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல்

(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய

இந்நன்னாளில் . . . . அவர்களுக்கும்

அவர்கள் குடும்பத்தார்களுக்கும், சுற்றத்தார்க்கும்,

சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,

பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்

பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள்

பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல

வாழ்வெய்தவும்

உமது திருவடிகளில்.................

மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

அருள்மிகு முருகவேள் போற்றி
8 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.

2. ஓம் திருச்செந்தூரா போற்றி.

3. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.

4. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி.

5. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.

6. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.

7. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி.

8. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம்!

அருள்மிகு முருகவேள் 16 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.
2. ஓம் உமையருட் செல்வா போற்றி.
3. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி.
4. ஓம் காவடி விருப்பனே போற்றி.
5. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி.
6. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி.
7. ஓம் சைவக் கொழுந்தே போற்றி.
8. ஓம் ஞானப் பழமே போற்றி.
9. ஓம் திருச்செந்தூரா போற்றி.
10. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.
11. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி.
12. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.
13. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.
14. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி.
15. ஓம் முத்தமிழ் முருகா போற்றி.
16. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம்!

அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி.
3. ஓம் அழகினுக் கழகே போற்றி.
4. ஓம் அருளினுக் கருளே போற்றி.
5. ஓம் அலங்கார நாயக போற்றி.
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி.
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி.
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி.
9. ஓம் இமையோர் இறைவா போற்றி.
10. ஓம் இமயப் புகழோய் போற்றி.
11. ஓம் இருளினை நீக்குவாய் போற்றி.
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி.
13. ஓம் ஈசனார் குருவே போற்றி.
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி.
15. ஓம் உமையருட் செல்வா போற்றி.
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி.
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி.
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி.
19. ஓம் எழில் அற்புதனே போற்றி.
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி.
21. ஓம் ஔவைக் கரசே போற்றி.
22. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி.
23. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி.
24. ஓம் கந்தா முருகா போற்றி.
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி.
26. ஓம் கங்கையின் மைந்தா போற்றி.

27. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி.
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி.
29. ஓம் கார்த்தி கேயனே போற்றி.
30. ஓம் காவற் காரனே போற்றி.
31. ஓம் காவடி விருப்பனே போற்றி.
32. ஓம் குகனென நின்றாய் போற்றி.
33. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி.
34. ஓம் குமரகிரி வாசனே போற்றி.
35. ஓம் குராவடி வேலனே போற்றி.
36. ஓம் குறத்திக் கோவே போற்றி.
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி.
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி.
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி.
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி.
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி.
42. ஓம் கொற்றவை குமரா போற்றி.
43. ஓம் கொற்றதனி வேலோய் போற்றி.
44. ஓம் கோலமயில் குமரா போற்றி.
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி.
46. ஓம் சங்கப் புலவா போற்றி.
47. ஓம் சரவண பவனே போற்றி.
48. ஓம் சண்முகக் குமரா போற்றி.
49. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி.
50. ஓம் சிவகுரு நாதா போற்றி.
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி.
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி.
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி.

54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி.
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி.
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி.
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி.
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி.
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி.
60. ஓம் சேந்தா முருகா போற்றி.
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி.
62. ஓம் ஞானச் சுடரே போற்றி.
63. ஓம் ஞானப் பழமே போற்றி.
64. ஓம் தங்க வேலனே போற்றி.
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி.
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி.
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி.
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி.
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி.
70. ஓம் திருச்செந் தூரா போற்றி.
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி.
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி.
76. ஓம் திருமால் மருகா போற்றி.
77. ஓம் திருவருட் செல்வா போற்றி.
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி.
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி.
80. ஓம் தூ மறைக்கு ஆதீ போற்றி.

81. ஓம் தெய்வானை கணவா போற்றி.
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி.
33. ஓம் நக்கீர நாயகா போற்றி.
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி.
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி.
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி.
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி.
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி.
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி.
90. ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி.
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி.
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி.
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி.
94. ஓம் மலைமகள் மகனே போற்றி.
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி.
96. ஓம் மாயோன் மருகா போற்றி.
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி.
98. ஓம் முத்தைய வேளே போற்றி.
99. ஓம் முருகெனும் அழகே போற்றி.
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி.
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி.
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி.
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி.
104. ஓம் விழித்துணை அழகா போற்றி.
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி.
106. ஓம் வேடர்தம் மருதா போற்றி.
107. ஓம் வையச் சுடரே போற்றி.
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி ஓம் !

முருகப் பெருமான்

அஞ்சு முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

.... பெருமான் / அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்களம் உண்டாகுக.

அருள்மிகு

சிவபெருமான் போற்றி



தமிழ்நாடு அரசு வெளியீடு

போற்றிப் பாடல்களை இறையன்புடன்
பதித்து வழங்குபவர்கள்

பண்ணாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட்
252, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர் – 641 043

நன்றி

" எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"

எனும் முழக்கத்தை உருவாக்கி

தமிழறிந்த பெருமக்கள் எல்லாம்

தாம் வணங்கும் தெய்வத்தைத்

தமிழால் வழிபட வேண்டும்

எனும் கருத்தை வலியுறுத்தி

அறநிலையைத் துறையின் சார்பில்

போற்றிப் பாடல்களை

வெளியிடும் வாய்ப்பளித்த

பவள விழா நாயகர்

தமிழக முதல்வர் கலைஞர்

அவர்கட்கு நன்றி

– இந்து சமய அறநிலையத்துறை

Rs: 1-00
(ரூபாய் ஒன்று மட்டும்)

தமிழில் போற்றிப் பாடல்கள்

மேம்பாட்டுக் குழு

1. தி. முத்துக்கண்ணப்பர், சென்னை.
2. முனைவர் சுப. அண்ணாமலை, மதுரை.
3. முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை.
4. பா. நமசிவாயம், திருப்பத்தூர்.
5. முனைவர் அ. அறிவொளி, திருச்சி.
6. முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை.
7. முனைவர் இரா. செல்வகணபதி, மயிலாடுதுறை.
8. புலவர் கோ. சாரங்கபாணி, புதுவை.
9. முனைவர் த. அமிர்தலிங்கம், சென்னை.
10. வேங்கடவரதன், சென்னை.
11. சு. இளங்கோவன், காஞ்சிபுரம்.

முனைவர் மு. தமிழ்க் குடிமகன்
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்

தமிழில் போற்றிப் பாடல்கள்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு சமுதாயத்தின் ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்கள் உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயற்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும் நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகன், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக்கவிதை எழுதிவிடக்கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருமுருகாற்றுப் படை போன்ற மூல நூல் வரிகள் ஓரே சீராக, இரு சீராக, முச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக்கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில்தான் இந்த வரிகள் அரங்கேற்றப் பட்டன. இது இரண்டாவது கட்டம். அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து, திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின்

உருவாக்கப்பட்டபோற்றிப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஆதீனகர்த்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும் எங்கள் துறையின் சார்பில் இதைச் செயல்படுத்துவதிலும் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி வரிகளும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

ஆணையர் மெய்கண்டதேவன் தலைமையில் அலுவலர் குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட பண்ணாரியம்மன் சுகர்ஸ் தலைவர் திரு எஸ்.வி. பாலசுப்பிரமணியம் அவர்களும் மற்றும் நல்லுள்ளம் கொண்ட அன்பர்களும் உதவ முன் வந்துள்ளனர்.

இவ்வகையில் துறைச் செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள் உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

" என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யு மாறே "

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்

24-4-98. **மு. தமிழ்க்குடிமகன்**

அணிந்துரை

திருமிகு த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
தலைமைச் செயலகம், சென்னை 600 009.

தமிழில் இறைவனைப் போற்றுவதே இறைவனுக்குப் பெருமகிழ்வான ஒன்று என்பதைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்,

" அருச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார் "

எனப் பாடியிருக்கக் காண்கின்றோம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம்தாம் சென்று வழிபட்ட திருத்தலங்களில், தமிழிலேயே தத்தம் பாடல்களைப் பாடி இறைவர்–இறைவியரைப் போற்றினரே அன்றிப்பிற மொழியில் பாடல்களைப் பாடி அருச்சனை செய்து இறைவரை வழிபட்டதாக வரலாறு ஒன்றும் இல்லை.

தமிழமுதினைப் பருகிப் பெருமகிழ்வு காண்பதற்கே இறைவரும், இறைவியரும் இப்பூவுலகில் மானிடத்தோற்றத்தில் மகிழ்வோடு வந்து தோன்றி வாழ்ந்ததாகப் பைந்தமிழ் இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன.

" தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும், தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதுவும், தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில், இக்
கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார் "

என்று குமரகுருபரர் பாடியிருப்பது கொண்டு பைந்தமிழ்மேல் இறைவர்–இறைவியருக்குள்ள பற்றினை நாம் நன்கு உணரலாம்.

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றலும் நம்தெய்வத் தமிழ்மொழிக்கே உண்டு என்பதையும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில்;

" தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத்
திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச்
சொற்களோ சாற்றீர் "

என்று பாடியிருப்பது கொண்டு தெளியலாம்.

இத்தகைய அருந்தமிழ் மொழியில் ஒவ்வொரு நாளும் திருக்கோயில்கள் தோறும் இறைவர்–இறைவியரைப் போற்றுதல் செய்யின் நம் தமிழ் மக்களின் நாடும், வீடும் ஒருங்கு பல்லாயிரம் கோடி பல்வளமும் நலமும் பெற்றுச் சிறக்கும் என்பது திண்ணம்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி எதிர் காலத்தின் சிறப்பும் தனிசிறந்தோங்கும் வகையில் நற்றமிழ் போற்றி நூல்களை, ஞாலம் போற்றும் ஞானத்தமிழ் மொழியில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியிடுவதும் நம் தமிழ்த் திருநாட்டின் வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துகளில் பொறிக்கத்தக்க மாட்சிமிக்க சாதனையாகும்.

என் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்து அகம் மகிழ்கின்றேன்.

அன்புடன்
30–4–98. த. இரா. சீனிவாசன்

முன்னுரை

திருமிகு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை – 600 034.

அன்னைத் தமிழில் அருந்தமிழ் போற்றி நூல்கள் அறநிலையத்துறை அச்சிட்டு வெளியிடும் இந்நாள் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க ஒரு வெற்றித் திருநாள் ஆகும்.

பன்னெடுங்காலமாக நம் தமிழக மக்கள் ஏங்கிய ஏக்கம் தீரத் திருக்கோயில்களில் இன்று பெருந்தமிழ் பேரொளிப்போற்றி ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றது.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும், தமிழோடு, இசைப் பாடல் மறவாத நாவுக்கரசுப் பெருமானும் உளம் மகிழும் திருநாள் இந்நாள். எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு ஞானத் தமிழ் பாடிப் போற்றிய ஆழ்வார் பெருமக்கள் மனம் பூரிக்கும் நன்னாள் இப் பொன்னாள்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில், நம் தமிழ் மக்கள் நமக்குரிய தமிழ்மொழியில் நமக்குரிய இறைவர் இறைவியரை வழிபட்டுப் போற்றுவதே இயற்கை நெறிக்கு இயைந்த ஒன்றாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து நம் தமிழ் அறிஞர் பெருமக்கள் தெய்வத் திருமுறைகளிலிருந்தும், திவ்வியப் பிரபந்தங்களிலிருந்தும், ஒலிப்பிற்கு இனிய, எளிய போற்றிகளைத் தொகுத்துத் திரட்டி, அவற்றை நூலாக வழங்கியுள்ளார்கள்.

" கண்டபெரு மந்திரமே மூவர் பாடல் "

என்ற உமாபதிசிவம் அவர்களின் அருள் வாக்கிற்கு இணங்கவும்.

" செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி "

என்ற வேதாந்ததேசிகர் தம் மெய்ம்மொழிக்கு இணங்கவும்

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த அருந்தமிழில் அமைந்துள்ள இப்போற்றி நூல்களைப் போற்றித் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது திண்ணம்.

தமிழின் இனிமையிலே இறைவன் உறைகின்றான். தமிழிசைப் பாடல்களிலே இறைவனும் இறைவியும் மகிழ்கின்றார்கள்; தமிழில் போற்றி செய்யும் தமிழ்ப் பெருமக்களுக்கே எல்லா நலங்களும், வளங்களும் நிறைக்கின்றார்கள்; தமிழ்ப் பெருமக்கள் எல்லாரும் இசைவிருப்பர் ஆகிய இறைவர்-இறைவியரை இன்தமிழால் போற்றிப் பரவி வாழ்வில் வளங்களும், நலங்களும் சேர்ந்து, வாழ்வாங்கு வாழ அன்புடன் வேண்டுகின்றேன்.

அறநிலையத்துறையின் இவ்வரும்பணிக்கு ஊக்கமுடன் ஆக்கம் சேர்த்த சான்றோர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

" பாரில் அரியாசனம் உனக்கே ஆனால்
சரியாரும் உண்டோ தமிழே ! "

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் – இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் ".

அன்புடன்
ச. மெய்கண்டதேவன்.

தமிழ் அருச்சனை – அருள் வேண்டுதல்

(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய

இன்நன்னாளில் ....

அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும்,

சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும் உலகுயிர்கட்கும்,

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும்

பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள்

பெருகவும், உமது திருவருள் பெருகவும்,

மங்கலவாழ்வெய்தவும்

உமது திருவடிகளில் ......

மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

அருள்மிகு சிவபெருமான்

8 போற்றிகள்

மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி (நா)
2. ஓம் ஆலமர நிழலில் அமர்ந்தாய் போற்றி (நா)
3. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி (நா)
4. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி (நா)
5. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி (ச)
6. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி (ச)
7. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முதல்வா போற்றி (மா)
8. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி (மா)

(ச) – சம்பந்தர்

(நா) – நாவுக்கரசர்

(சு) – சுந்தரர்

(மா) – மாணிக்கவாசகர்

அருள்மிகு சிவபெருமான்

16 போற்றிகள்

மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி (நா)
2. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி (நா)
3. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி (நா)
4. ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி (நா)
5. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி (நா)
6. ஓம் கங்கையைச் சடையில் கரந்தாய் போற்றி (ச)
7. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி (ச)
8. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி (ச)
9. ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி (ச)
10. ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி (ச)
11. ஓம் செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி (நா)
12. ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி (மா)
13. ஓம் மந்திரமும் மறைப்பொருளும் ஆனாய் போற்றி (நா)
14. ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி (நா)
15. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முதல்வா போற்றி (மா)
16. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி (மா)

அருள்மிகு சிவபெருமான்
108 போற்றிகள்

மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி (நா)
2. ஓம் அடியவர்க் காரமுது ஆனாய் போற்றி (நா)
3. ஓம் அண்டத்துக்கு அப்பாலாய் நின்றாய் போற்றி (நா)
4. ஓம் அதிபதியே ஆர்அமுதே ஆதீ போற்றி (நா)
5. ஓம் அந்தியாய் நின்ற அரனே போற்றி (நா)
6. ஓம் அமரர் பதியாள வைத்தாய் போற்றி (நா)
7. ஓம் அருமையில் எளிய அழகே போற்றி (மா)
8. ஓம் அருந்தவர்கள் தொழுதுஏத்தும் அப்பா போற்றி (நா)
9. ஓம் அனல்அங்கை ஏந்திய ஆதீ போற்றி (நா)
10. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி (சு)
11. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி (நா)
12. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி (நா)
13. ஓம் ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி (நா)
14. ஓம் இடர்கடி கணபதிவர அருளினை போற்றி (சு)
15. ஓம் இரவிடை ஒள்எரி ஆடினாய் போற்றி (சு)
16. ஓம் ஈண்டுஒளி சேர்கங்கைச் சடையாய் போற்றி (நா)
17. ஓம் உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி (நா)
18. ஓம் உடலே உயிரே உணர்வே போற்றி (சு)
19. ஓம் உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி (நா)
20. ஓம் உள்ஒளி வீசும் ஒருவ போற்றி (நா)
21. ஓம் ஊரும் அரவம் உடையாய் போற்றி (சு)
22. ஓம் ஊனத்தை நீக்கும் உடலே போற்றி (நா)
23. ஓம் ஊன்உடைப் பிறவியை ஒழிப்பாய் போற்றி (சு)
24. ஓம் எண்ணரிய திருநாமம் உடையாய் போற்றி (நா)
25. ஓம் எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி (மா)

26. ஓம் எரிசுடராய் நின்ற இறைவா போற்றி (நா)
27. ஓம் எரியும் மழுவாள் படையாய் போற்றி (சு)
28. ஓம் எல்லாம் சிவன்என நின்றாய் போற்றி (நா)
29. ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி (நா)
30. ஓம் ஏழ்உலகும் ஏழ்மலையும் ஆனாய் போற்றி (நா)
31. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி (நா)
32. ஓம் ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி (நா)
33. ஓம் ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி (நா)
34. ஓம் கங்கையைச் சடையில் கரந்தாய் போற்றி (ச)
35. ஓம் கண்ணாய் உலகுஎலாம் காத்தாய் போற்றி (நா)
36. ஓம் கம்பமா கரிஉரித்த கபாலி போற்றி (ச)
37. ஓம் கலைமான் மறிஏந்தும் கையா போற்றி (நா)
38. ஓம் கழல்அடைந்தார் செல்லும் கதியே போற்றி (நா)
39. ஓம் கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி (நா)
40. ஓம் கற்றுஅறிந்த கலைஞானம் ஆனாய் போற்றி (நா)
41. ஓம் காப்புஅரிய ஐம்புலனும் காத்தாய் போற்றி (நா)
42. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி (ச)
43. ஓம் காவாய் கனகக் குன்றே போற்றி (மா)
44. ஓம் குழைக்கும் பயிர்க்குஓர் புயலே போற்றி (சு)
45. ஓம் குறைஉடை யார்குறை தீர்ப்பாய் போற்றி (ச)
46. ஓம் கொங்குஅலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி (நா)
47. ஓம் சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி (மா)
48. ஓம் சிவலோக நெறிதந்த சிவனே போற்றி (நா)
49. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி (ச)
50. ஓம் சுடர்ஒளியாய் விளங்கும் சோதி போற்றி (நா)
51. ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி (ச)
52. ஓம் செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி (நா)
53. ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி (ச)

54. ஓம் செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி (நா)
55. ஓம் செல்வாய செல்வம் தருவாய் போற்றி (நா)
56. ஓம் செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி (நா)
57. ஓம் சேவின் மேல்வரு செல்வா போற்றி (சு)
58. ஓம் ஞாயிறாய் மதியமாய் நின்றாய் போற்றி (சு)
59. ஓம் தக்கன் செய் பெருவேள்வி தகர்த்தாய் போற்றி (நா)
60. ஓம் தன்ஒப்பு அறியாத் தழலாய் போற்றி (ச)
61. ஓம் தீராநோய் தீர்த்துஅருள வல்லாய் போற்றி (நா)
62. ஓம் தூநீறு சேர்ந்துஇலங்கும் தோளா போற்றி (நா)
63. ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி (மா)
64. ஓம் நஞ்சுஒடுங்கும் கண்டத்து நாதா போற்றி (நா)
65. ஓம் நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி (மா)
66. ஓம் நான்மறையோடு ஆறுஅங்கம் ஆனாய் போற்றி (நா)
67. ஓம் நால்திசைக்கும் விளக்காய நாதா போற்றி (நா)
68. ஓம் நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி (நா)
69. ஓம் நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி (நா)
70. ஓம் நோக்குஅரிய திருமேனி உடையாய் போற்றி (நா)
71. ஓம் பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி (நா)
72. ஓம் பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி (நா)
73. ஓம் பண்துலங்கப் பாடல் பயின்றாய் போற்றி (நா)
74. ஓம் பலரும் பரவப் படுவாய் போற்றி (ச)
75. ஓம் பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி (நா)
76. ஓம் பற்றி உலகை விடாதாய் போற்றி (நா)
77. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி (நா)
78. ஓம் பாட்டுஅகத்து இசையாகி நின்றாய் போற்றி (சு)
79. ஓம் பாரோர் விண்ஏத்தப் பாடுவாய் போற்றி (நா)
80. ஓம் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி (நா)
81. ஓம் பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி (நா)

82. ஓம் பிறவி அறுக்கும் பிரானே போற்றி (சு)
83. ஓம் பிறைஅணி செஞ்சடை பிஞ்ஞகா போற்றி (ச)
84. ஓம் புற்றுஅரவக் கச்சுஆர்த்த புனிதா போற்றி (நா)
85. ஓம் பூத நாதனே புண்ணியா போற்றி (சு)
86. ஓம் பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி (சு)
87. ஓம் பெரியாய் சிறியாய் பிறையாய் போற்றி (ச)
88. ஓம் பேர்ஆயிரம்உடைப் பெம்மான் போற்றி (மா)
89. ஓம் பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி (நா)
90. ஓம் மந்திரமும் மறைப்பொருளும் ஆனாய் போற்றி (நா)
91. ஓம் மயில்ஊர்தி முருகவேள் தாதை போற்றி (சு)
92. ஓம் மருந்துஅமரர்க்கு அருள்புரிந்த மைந்தா போற்றி (நா)
93. ஓம் மறைஉடைய வேதம் விரித்தாய் போற்றி (நா)
94. ஓம் மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் போற்றி (நா)
95. ஓம் மன்னிய திருவின் மலையே போற்றி (மா)
96. ஓம் மிக்கோர்கள் ஏத்தும் விளக்கே போற்றி (நா)
97. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முன்னவா போற்றி
98. ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி (நா)
99. ஓம் மூவா நான்மறை முதல்வா போற்றி (மா)
100. ஓம் மூவாய் பிறவாய் இறவாய் போற்றி (நா)
101. ஓம் மூவுலகும் தான்ஆய முதல்வா போற்றி (நா)
102. ஓம் மெய்சேரப் பால்வெண்நீறு ஆடீ போற்றி (நா)
103. ஓம் மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி (நா)
104. ஓம் வண்ணம் ஆயிரம் உடையாய் போற்றி (ச)
105. ஓம் வானோர்க்கு அருளிய மருந்தே போற்றி (மா)
106. ஓம் வானோர் வணங்கப் படுவாய் போற்றி (நா)
107. ஓம் வெள்ளிக் குன்றன்ன விடையாய் போற்றி (நா)
108. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி (மா)

அருள்மிகு சிவபெருமான் பாடல்

(பாடல் பெற்ற தலம் என்றால், தலத்திற்கு உரிய தேவாரம் பாடலாம். இல்லை எனில் பின் வரும் பாடல்கள் பாடலாம்)

ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

அண்ணல் ஆலவாய் நண்ணினான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே.

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு சிவபெருமான் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்களம் உண்டாகுக.

போற்றிப்பாடல்களை இறையன்புடன் இணைந்து
பதித்து வழங்குபவர்கள்

SPSM



ஸ்ரீ பரமேஸ்வரி ஸ்பின்னிங் மில்ஸ்

4/64, செல்வலக்ஷ்மி நகர், வீரபாண்டி அஞ்சல்,
திருப்பூர் – 641 605. தொலைபேசி : 0421 710574

ஆர். சுப்ரமணியன்
திருமதி. எஸ். கலாவதி

ஆர்.எஸ். பாலகிருஷ்ணன்
திருமதி. பி. ரோகிணி


ஆர்.எஸ். சரவணன்

திரு. எஸ். சரவணபவன்
ஸ்ரீகாயத்ரி மில்ஸ்
64, பாவாடை நாயக்கர் தெரு, ஈரோடு
தொலைபேசி : 250792 – அலுவலகம்
253389 – வீடு

திருமதி தர்மர் தேவகி
சிங்கப்பூர்

திரு. எஸ். குருசாமி
சித்தனாதன் & சன்ஸ்
அடிவாரம், பழனி

திரு. ந. ஹரிஹரமுத்து
திருக்கோயில், பிரசாத விற்பனை நிலையம்,
மலைக்கோயில், பழனி



ருக்மணி ஆப்செட் பிரஸ், கோவை - 21

அருள்மிகு உமையம்மை போற்றி



தமிழ்நாடு அரசு வெளியீடு

நன்றி



"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"
எனும் முழக்கத்தை உருவாக்கித்

தமிழறிந்த பெருமக்கள் எல்லாம்
தாம் வணங்கும் தெய்வத்தைத்

தமிழால் வழிபட வேண்டும்
எனும் கருத்தை வலியுறுத்தி
அறநிலையத் துறையின் சார்பில்
போற்றிப் பாடல்களை
வெளியிடும் வாய்ப்பளித்த
பவளவிழா நாயகர்
தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர்
அவர்கட்கு நன்றி

-இந்து சமய அறநிலையத் துறை

பாடல்

அருள்மிகு உமையம்மை

நிறைவாக அவ்வத் தலத்திற்கு உரிய அம்மையின் பாடல் ஒன்றினை ஓதிப் போற்றியை நிறைவு செய்யலாம்.

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு உமையம்மை அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறுக! மங்களம் உண்டாகுக!

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ.பி.எச்.டி.,
தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்

5-5-98
தி.பி. 2029/ சித்திரை 22.

தமிழில் போற்றிப் பாடல்கள்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு குழுகாயத்தின் (சமுதாயத்தின்) ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்களை உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயல்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும்

70. ஓம் நஞ்சமு தாக்கிய நங்காய் போற்றி
71. ஓம் நறுமா மலர்ச் சடையாய் போற்றி
72. ஓம் நாயகி நாரணி நான்முகி போற்றி
73. ஓம் பஞ்சினும் மெல்லடிப் பாவாய் போற்றி
74. ஓம் பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி
75. ஓம் பழமறைப் பொருளே பயனே போற்றி
76. ஓம் பனிமால் இமயப் பிடியே போற்றி
77. ஓம் பாசம் அங்குசம் உடையாய் போற்றி
78. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
79. ஓம் பாலினும் நன்மொழிப் பாவாய் போற்றி
80. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
81. ஓம் பிள்ளைச் செல்வம் அருள்வாய் போற்றி
82. ஓம் புவித்தலம் அனைத்தும் பூத்தாய் போற்றி
83. ஓம் பூதம் ஐந்தாய் விரிந்தாய் போற்றி
84. ஓம் மகிடன் தலைமேல் அந்தரி போற்றி
85. ஓம் மங்கல மங்கையர் தவமே போற்றி
86. ஓம் மஞ்சள் குங்குமம் காப்பாய் போற்றி
87. ஓம் மணியே மணியின் ஒளியே போற்றி
88. ஓம் மருளில் விளைந்த தெருளே போற்றி
89. ஓம் மலரே மலரின் மணமே போற்றி

உள்ள குறிப்பிடத்தக்க ஆதீனகர்த்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிட மிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும், எங்கள் துறையின் சார்பில் இதைச் செயற்படுத்துவதிலும், தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக்கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி வரிகளும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

30. ஓம் இருமையும் உதவும்எம் தாயே போற்றி
31. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
32. ஓம் உயிர்க்கு உயிராம் உணர்வே போற்றி
33. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
34. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
35. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
36. ஓம் ஏதம் அகற்றும் மாதே போற்றி
37. ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
38. ஓம் ஒளிமதிச் செஞ்சடை உடையாய் போற்றி
39. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
40. ஓம் ஒன்றில் விரிந்த பலவே போற்றி
41. ஓம் ஓங்கார உட்பொருள் உமையே போற்றி
42. ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி
43. ஓம் ஓத அரிய உணர்வே போற்றி
44. ஓம் ஐங்கரன் தன்னை அளித்தாய் போற்றி
45. ஓம் ஐந்தெழுத்துட் பொருள் ஆனாய் போற்றி
46. ஓம் ஐந்தொழில் இயற்றும் அரசே போற்றி
47. ஓம் கடவுள் மணியே கதிரே போற்றி
48. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
49. ஓம் கண்ணே கண்ணின் மணியே போற்றி

தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல்

(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய

இந்நன்னாளில் .... அவர்கட்கும்

அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும்,

சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம்,

பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி

நன்னிலை பெருகவும், நீண்ட வாழ்நாள்

பெருகவும், திருவருள் பெருகவும்,

மங்கள வாழ்வெய்தவும்

உம் திருவடிகளில்

மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

9. ஓம் ஓசை ஒலி எலாம் ஆனாய் போற்றி
10. ஓம் ஐந்தெழுத்துப் பொருள் ஆனாய் போற்றி
11. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
12. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
13. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
14. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
15. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
16. ஓம் வேத நாயகி போற்றி போற்றி

அருள்மிகு உமையம்மை 108 போற்றிகள்

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் அகில உலகுக்கும் அன்னாய் போற்றி
3. ஓம் அஞ்செஞ் சீரடி அமுதே போற்றி
4. ஓம் அடியவர்க் கின்பம் அருள்வாய் போற்றி
5. ஓம் அடியார் உளத்துள் விளக்கே போற்றி
6. ஓம் அடியார் வினைகெட ஆள்வாய் போற்றி
7. ஓம் அணுகா தவர்க்குப் பிணியே போற்றி
8. ஓம் அணுவிலும் சிறிய அணுவே போற்றி
9. ஓம் அண்டம் யாவையும் பூத்தாய் போற்றி

90. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
91. ஓம் மலையவன் மகளாய் உதித்தாய் போற்றி
92. ஓம் மரகத மணியின் ஒளியே போற்றி
93. ஓம் முத்தலைச் சூல முதல்வீ போற்றி
94. ஓம் முப்பத் திரண்டறம் வளர்ப்பாய் போற்றி
95. ஓம் முப்புரம் எரித்த முதல்வீ போற்றி
96. ஓம் முழுவதும் ஈன்ற முதலே போற்றி
97. ஓம் மூவா முகுந்தற்கு இளையாய் போற்றி
98. ஓம் மோகம் அழிக்கும் முதல்வீ போற்றி
99. ஓம் யாவர்க்கும் மேலை இறைவீ போற்றி
100. ஓம் யாழினும் இனிய மொழியாய் போற்றி
101. ஓம் வஞ்சகர் நெஞ்சில் வாராய் போற்றி
102. ஓம் வம்பில் பழுத்த கனியே போற்றி
103. ஓம் வாசமலர் எலாம் ஆனாய் போற்றி
104. ஓம் வெற்றி வெல்போர்க் கொற்றவை போற்றி
105. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
106. ஓம் வேண்டுவோர் வேண்டுவ ஈவாய் போற்றி
107. ஓம் வேதத் தொடையின் பயனே போற்றி
108. ஓம் வேத நாயகி போற்றி போற்றி

தமிழ்நாடு அரசு வெளியீடு

போற்றிப் பாடல்களை இறையன்புடன்
பதித்து வழங்குபவர்கள்

அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்
திருவண்ணாமலை - 606 601
திருவண்ணாமலை மாவட்டம்

50. ஓம் கயிலைப் பதமருள் கருணை போற்றி
51. ஓம் கருமையில் அழகிய கலையே போற்றி
52. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
53. ஓம் கற்பகத் தருவே கலையே போற்றி
54. ஓம் கன்னியர் நோன்பு உகப்பாய் போற்றி
55. ஓம் காவியங் கண்ணி உமையே போற்றி
56. ஓம் கானகம் உகந்த காளீ போற்றி
57. ஓம் குவளை மலர்க்கண் கொண்டாய் போற்றி
58. ஓம் கொன்றை வேய்ந்த குழலாய் போற்றி
59. ஓம் சங்கர னார்மனை விளக்கே போற்றி
60. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
61. ஓம் சிறக்கும் கமலத் திருவே போற்றி
62. ஓம் சீர்சால் வரமருள் தாயே போற்றி
63. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
64. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
65. ஓம் திருநீற்று ஒளியே திறமே போற்றி
66. ஓம் தீபச்சுடராய்த் திகழ்வாய் போற்றி
67. ஓம் தூயர் உளத்தில் இருப்பாய் போற்றி
68. ஓம் தேடற்கு அரிய நிதியே போற்றி
69. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி

தமிழில் போற்றிப் பாடல்கள்

-மேம்பாட்டுக் குழு

1. முனைவர். தி.முத்துக்கண்ணப்பர், சென்னை
2. முனைவர் சுப. அண்ணாமலை, மதுரை
3. முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை
4. பேராசிரியர் பா.நமசிவாயம், திருப்பத்தூர்
5. முனைவர் அ.அறிவொளி, திருச்சி
6. முனைவர் தெ. ஞானசுந்தரம், சென்னை
7. முனைவர் இரா.செல்வகணபதி, மயிலாடுதுறை
8. புலவர் கோ.சாரங்கபாணி, புதுவை
9. முனைவர் த.அமிர்தலிங்கம், சென்னை
10. திரு வேங்கடவரதன், சென்னை.
11. திரு சு. இளங்கோவன், காஞ்சிபுரம்.

10. ஓம் அரவ முடியில் இருப்பாய் போற்றி
11. ஓம் அருள்சூல் கொண்ட அம்மா போற்றி
12. ஓம் அருள்நிறை கடலே அமுதே போற்றி
13. ஓம் அழகன் முருகனை அளித்தாய் போற்றி
14. ஓம் அறத்தின் வடிவே அருளே போற்றி
15. ஓம் அறிவும் மகிழ்வும் அருள்வாய் போற்றி
16. ஓம் அறுவர்க்கு இளைய நங்காய் போற்றி
17. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
18. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி
19. ஓம் ஆடகத் தாமரை அணங்கே போற்றி
20. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
21. ஓம் ஆதி முதலே அருளே போற்றி
22. ஓம் ஆயிரம் திருப்பெயர் உடையாய் போற்றி
23. ஓம் ஆரா அமுதம் ஆனாய் போற்றி
24. ஓம் ஆருயிர் வளர்க்கும் மருந்தே போற்றி
25. ஓம் ஆலம் அமுதுசெய் அன்னாய் போற்றி
26. ஓம் ஆறா தாரத்து அமர்ந்தாய் போற்றி
27. ஓம் இமயமடக்கொடித் தாயே போற்றி
28. ஓம் இமவான் பெற்ற தவமே போற்றி
29. ஓம் இரவாய் பகலாய் விரிந்தாய் போற்றி

நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகன், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக் கவிதை எழுதிவிடக் கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருமுருகாற்றுப்படை போன்ற மூல நூல் வரிகள் ஒரே சீராக, இரு சீராக, முச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக் கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில்தான் இந்த வரிகள் அரங்கேற்றப்பட்டன. இது இரண்டாவது கட்டம்.

அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து, திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின் உருவாக்கப்பட்ட போற்றிப் பாடல்கள் தமிழகத்தில்

உமையம்மை 8 போற்றிகள்

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
3. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
4. ஓம் ஐந்தொழில் இயற்றும் அரசே போற்றி
5. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
6. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
7. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
8. ஓம் வேதநாயகி போற்றி போற்றி

உமையம்மை 16 போற்றிகள்

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
3. ஓம் இமய மடக்கொடித் தாயே போற்றி
4. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
5. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
6. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
7. ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
8. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி

ஆணையர் தலைமையில் அலுவலர் குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட பலர் தாமே உதவ முன்வந்துள்ளனர்.

இவ்வகையில் துறைச் செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள், உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து உதவ முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

"என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யு மாறே"

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

அன்புடன்,
மு. தமிழ்க்குடிமகன்


சிவ
சிவ
சிவ
சிவ
அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்
திருவண்ணாமலை,
திருக்கார்த்திகை தீபக்காட்சி